[1979 நவம்பர் 2

திரு. அ. செல்லப்பா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அளித்துவரும் உதவித்தொகை ரூபாய் 75 என்று அளிப்பதை ரூபாய் 100 என்று கொடுக்க முன்வருவதாக அறிவித்தது. அதற்கான அரசாணையை விரைவில் அறிவிக்க முன் வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜேம்ஸ் அவர்கள் இதே கேள்வியைத்தான் கேட்டார்கள். அதற்கு பதில் அளித்தாகிவிட்டது.

திருப்புவனம் காவல் சரகம்

***வினா எண். 80-ஆ—திரு. வ. மு. சுப்பிரமணியன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மானாமதுரைத் தொகுதியில் திருப்புவனம் காவல் நிலைய சரகத்தினை இரண்டாகப் பிரிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

திரு. சு. ம. துரைராஜ் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : இல்லை.

(முற்பகல் 10-00)

திரு. வ. மு. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, இந்த திருப்புவனம் காவல் பரப்பு மிகவும் அதிகமாக இருக்கிறது. பரப்பு மிகவும் அதிகமாக இருப்பதால் ஆங்காங்கே நடைபெறுகின்ற சில நிகழ்ச்சிகளை காவல் துறையினர் சென்று விசாரிப்பதற்கு காலதாமதம் ஏற்படுகிறது. அவர்கள் போவதற்கு சாலை வசதியும் சரியாக இல்லை. புகார் கொடுப்பதற்காக மக்கள் வர வேண்டுமென்றால் பல மைல் நடந்து வரவேண்டும். மேலும் பரப்பு அதிகமாக இருப்பதால் காவல் துறையினர் திறமையாகச் செயலாற்ற முடியவில்லை. ஆகவே, அதை இரண்டாகப் பிரிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

திரு. சு. ம. துரைராஜ் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவரவர்களே, இராமநாதபுரம் (கிழக்கு) காவல் மாவட்டம் மானாமதுரைத் தொகுதியிலுள்ள திருப்புவனம் காவல் நிலைய சரகம் பிரிக்க அவசியமில்லாத அளவில் (காம்பாக்ட்) உள்ளது. பலாத்காரத்துடன் நடந்த சொத்து சம்பந்தப்பட்ட குற்றங்கள் ஏதும் கடந்த ஐந்து ஆண்டுகளில் திருப்புவனம் காவல் நிலையத்தில் அறிவிக்கப்படவில்லை. ஒரு ஆண்டில் இந்திய பீனல் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை, மற்றொரு காவல் நிலையம் திறக்க வேண்டிய அளவுக்கு அதிகமாக இல்லை. ஆகவே, திருப்புவனம் காவல் நிலைய சரகத்தை இரண்டாகப் பிரிக்கும் அவசியமேதும் தற்பொழுது இல்லை.